

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 06-07-2024

# சட்டமே, குற்றமானது!

பா.ஜ.க. அரசால் நிறைவேற்றப்பட்டிருப்பது புதிய குற்றவியல் சட்டங்கள் அல்ல. அந்தச் சட்டங்களே, குற்றமானவைதான்!

- ★ **இந்திய தண்டனைச் சட்டம்**
- ★ **குற்றவியல் நடைமுறைச் சட்டம்**
- ★ **இந்திய சாட்சியச் சட்டம் - ஆகிய மூன்று சட்டங்களின் பெயரை**
- ★ **பாரதிய நியாய சம்ஹிதா**
- ★ **பாரதிய நாகரிக் சுரக்ஷ சம்ஹிதா**
- ★ **பாரதிய சாக்ஷிய ஆதிநியாம் - என்று பெயர் மாற்றி இருக்கிறது பா.ஜ.க. அரசு. நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் அனைத்து சுபிட்சங்களையும் வழங்கி முடித்து விட்டார்கள். களைத்துப் போய் உட்கார்ந்திருக்கும் இவர்கள், சட்டங்களை சம்ஹிதாக்களாக மாற்றிக் கொண்டு இருக்கிறார்கள்.**

இப்போது நடைமுறைக்கு வந்திருப்பது குற்றவியல் சட்டங்களல்ல, குழப்பச் சட்டங்கள். புதிய சட்டப்பிரிவுகள் சேர்க்கப்பட்டு, தண்டனைகள் மாற்றப்பட்டு இருந்தால் எந்தக் குழப்பமும் வராது. 'பிரிட்டிஷ் ஆட்சிக் காலச் சட்டங்களை மாற்றப் போகிறோம்' என்ற துடுக்குத்தனத்தில், சட்டப்பிரிவுகள் அனைத்தையும் மாற்றிவிட்டார்கள். காவல்துறையும் நீதிமன்றமும் குழம்பிப் போகப் போகின்றன. நாடு முழுவதும் வழக்கறிஞர்கள் போராட்டங்கள் தொடங்கி இருப்பதற்கு இதுதான் காரணம்.

ஜூலை 1 ஆம் தேதிக்கு முன் பதியப்பட்ட வழக்குகளை எந்தச் சட்டத்தின் படி விசாரணை நடத்த வேண்டும்? தண்டனை தர வேண்டும்? - இந்த அடிப்படை பதில் கூட இந்தச் சட்டத்தில் இல்லை.

சட்டப்பிரிவுகளையும் வரிசை எண்களையும் மாற்றுவதன் மூலமாக இதுவரை பதிவான அனைத்துப் புகார்களையும் மாற்ற வேண்டும். நீதிமன்றத்தில் இப்போது நடந்து கொண்டிருக்கும் வழக்குகளின் குற்றப்பிரிவுகளையும் மாற்ற வேண்டும். அதாவது இந்திய தண்டனைச் சட்டத்தின்படியும், பாரதிய நியாய சன்ஹிதா படியும் இனி வழக்கை நடத்த வேண்டும். இவை அனைத்தும் எத்தனை குழப்பங்களை ஏற்படுத்தும் என்பது காவல்துறையினருக்கும் வழக்கறிஞர்களுக்கும் நீதிபதிகளுக்கும், அனைத்துக்கும் மேலாக பாதிக்கப்பட்ட மக்களுக்கும்தான் தெரியும்.

இந்திய தண்டனைச் சட்டத்தின் 90 விழுக்காடு பிரிவு எண்களை மாற்றிவிட்டார்கள். மரணம் விளைவிக்கும் குற்றப் பிரிவு 304(ஏ). இதை 150 என மாற்றி இருக்கிறார்கள். இதனால் என்ன பயன்? இப்போது என்ன தேவை வந்தது? மரணம் விளைவிக்கும் குற்றப்பிரிவின் தண்டனையைக் குறைத்தல், தண்டனையை அதிகப்படுத்துதல் ஆகியவற்றைச் செய்திருந்தால் அது பற்றி விவாதிக்கலாம். நம்பர் மாற்றுவதால் என்ன சாதனையைச் செய்து விட்டார்கள். காலம் காலமாக மக்கள் மனதில் பதிந்த குற்றப்பிரிவு எண்களை மாற்றுவதற்கு என்ன அவசியம் வந்தது?

**நாளை முதல் ரயில்கள் அனைத்தையும் 'பஸ்' என்றுதான் சொல்ல வேண்டும் என்று சொல்லி 'பாரதிய பஸ்வே' என்று மாற்றிவிட்டால் தலையை ஆட்டி ஏற்றுக் கொள்ள முடியுமா? மைனாரிட்டி பா.ஜ.க. அரசுக்கு இந்த உரிமை இருக்கிறதா? ஆட்சி என்ற பெயரால் அவர்கள் காமெடி செய்து கொள்ளட்டும். சட்டத்தின் பேரால் செய்யக் கூடாது. சட்டப் புத்தகங்கள் 200 ஆண்டுகளாக இருப்பவை. 200 ஆண்டுகள் இருக்கப் போகிறவை.**

'காலனிய' காலத்தைவிட மோசமானதாக இருக்கிறதே 'பாரதிய' காலம். பிரிவினைச் செயல்கள், ஆயுதமேந்திய கிளர்ச்சிகள், நாசகார நடவடிக்கைகள், பிரிவினைவாத நடவடிக்கைகள் அல்லது ஒருமைப்பாட்டுக்கு ஆபத்தை விளைவிப்பது போன்ற புதிய குற்றப்பிரிவுகள் இதில்சேர்க்கப்பட்டுள்ளன. பா.ஜ.க.வுக்குஎதிரானவர்களைப் பழிவாங்கவே இவை சேர்க்கப்பட்டுள்ளன என்பதைச் சொல்லத் தேவையில்லை. கருத்துரிமைக் காவலர்களும் சமூகச் செயற்பாட்டாளர்களும் கடந்த பத்தாண்டு காலத்தில் கைது செய்யப்பட்டு பல ஆண்டுகள் சிறைவைக்கப்பட்டார்கள். சிறையிலும் இருக்கிறார்கள். இதை எல்லாம் நியாயப்படுத்தவும், இவர்கள் போன்றவர்களை மிரட்டவும் இந்தப் பிரிவுகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

தேசத்துரோகக் குற்றங்கள் என்று சொல்லித் தண்டிக்கும் 124 ஏ - உச்சநீதிமன்றத்தால் கடுமையாகக் கண்டிக்கப்பட்ட பழைய சட்டப் பிரிவு ஆகும். அதனையே புதிய சட்டத்தில் 154 ஆவது பிரிவாகக் கொண்டுவந்து விட்டார்கள். இறையாண்மை, ஒருமைப்பாடு என்ற பெயரால் யாரையும் எளிதில் தேசவிரோதிகள் ஆக்கும் குறுக்கு வழி இதில் இருக்கிறது. சாதாரணமாக ஆர்ப்பாட்டம் செய்தாலே தேசிய பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தலாம், அரசின் அனுமதியை வாங்காமல் காவல் அதிகாரியே இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தலாம் என்ற அளவுக்கு அதிகாரம் தரப்பட்டுள்ளது.

**இந்தியத் தண்டனைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள 80 விழுக்காடு குற்றத் தண்டனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஒருவரைக் கைது செய்தால் 15 நாட்களுக்குள் காவல்துறை எடுத்து விசாரிக்க வேண்டும் என்ற இன்றைய நடைமுறையை 40 முதல் 60 நாட்களாக நீட்டித்திருப்பதன் மூலமாக ஒருவரை விசாரிக்காமல் இரண்டு மாதங்கள் வரைக்கும் காவலில் வைக்கவும், அவர்களுக்கு இடைக்காலப் பிணை கிடைக்காமல் தடுக்கவும் முடியும். காவல்துறையின் கைகளில் முழுமையான அதிகாரங்களைத் தருவதாக இவை அமைந்துள்ளன.**

எதற்காக இதனை இப்போது செய்கிறார்கள்? நாட்டில் இப்போது இருக்கும் அனைத்துப் பிரச்சினைகளையும் மறைப்பதற்காக - அமுக்குவதற்காக இதை அவசர அவசரமாகச் செய்திருக்கிறார்கள். தங்களது ஆட்சியின் பலவீனங்களை மறைக்க இந்தக் காய்களை உருட்டி விட்டுள்ளார்கள். எதிர்க் கட்சிகளுக்கு விவாதிக்க வாய்ப்பே வழங்காமல் சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள். 'மாநிலங்களுக்குத் தங்கள் கருத்தைத் தெரிவிக்க அவகாசம் வழங்கப்படவில்லை' என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குற்றம் சாட்டி உள்ளார்கள். இச்சட்டங்களை நிறுத்திவைக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். ஒன்றிய சட்டத்துறை இணை அமைச்சர் அர்ஜுன்ராம் மேக்வாலிடம், 'விரிவான ஆலோசனை தேவை' என்று தி.மு.க. சார்பில் மாநிலங்களவை உறுப்பினர் வில்சன் வேண்டுகோள் வைத்துள்ளார்.

**சட்டத்தின் பெயர் இந்தியில் உள்ளது. உள்ளடக்கம் ஆங்கிலத்தில் உள்ளது. சட்டப் பிரிவுகள் குழப்பமாக உள்ளன. சட்டங்களின் உள்ளடக்கம் மோசமாக உள்ளது. மொத்தத்தில் குற்றவியல் சட்டங்களே குற்றமாக உள்ளன.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (5.7.2024) தலைமைச் செயலகத்தில், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொதுக்குழு உறுப்பினர்கள் – கவிஞர் நந்தலாலா, கவிஞர் நெல்லை ஜெயந்தா, திருவாரூர் பக்தவச்சலம், டாக்டர் ஸ்ரீநிதி சிதம்பரம், ஜாகிர் உசேன், திருமதி. பார்வதி ரவி கண்டசாலா, சி.எஸ்.முத்துகிருஷ்ணன், போஸ் வெங்கட், மங்கை அரிராஜன், எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியம், என்.சத்யராஜ், திருமதி. ஜி.முத்துலட்சுமி, டி.சேகர், பி.ராஜா, வை.ராஜநதி, ஜி.ராமானுஜம், வி.கே.வாசுதேவன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர், உறுப்பினர் செயலாளர் திருமதி. விஜயா தாயன்பன் ஆகியோர் உள்ளனர்.

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# அமைச்சர் எஸ்.ரகுபதி பேரன் எஸ்.நாச்சியப்பன் ரகுபதி - பி.அழகம்மை திருமண வரவேற்பு!

### புதுக்கோட்டையில் நாளை நடைபெறுகிறது!

புதுக்கோட்டை, ஜூலை 6-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, சரோஜா ரகுபதி ஆகியோரது மகள் டாக்டர் கவிதா சுப்பிரமணியன், என். சுப்பிரமணியன் ஆகியோரது மகன் எஸ்.நாச்சியப்பன் ரகுபதி,

புதுக்கோட்டை மாவட்டம் பொன் புதுப்பட்டி பொன்னமராவதியைச் சேர்ந்த கே.பழனியப்ப செட்டியார் - அபிராமி ஆச்சி ஆகியோர் மகள் டாக்டர் பி.அழகம்மை ஆகியோரது திருமணம் நாளை (07.07.2024 - ஞாயிற்றுக்கிழமை), காலை 9.45 முதல் 10.45 மணிக்குள் மணமகள் இல்லம் பொன் புதுப் பட்டியில் நடைபெறுகிறது.



இதனை தொடர்ந்து மாலை 6 மணி அளவில் புதுக்கோட்டை கலைஞர் அரங்கம், ஜெ.ஜெ. கல்லூரி வளாகத்தில் கழக தலைவர், தமிழக முதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்வுகளில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற, முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர,பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், செயல் வீரர்கள், அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், பொதுமக்கள், உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

## 'நீட்' தேர்வு முறைகேடு: குஜராத்தில்

# ரூ.2.30 கோடி காசோலை கண்டுபிடிப்பு!

### சி.பி.ஐ. கைப்பற்றியது!

அகமதாபாத், ஜூலை 6 -

குஜராத்தில் நீட் தேர்வு முறைகேட்டில் புதிய திருப்பமாக மாணவர்களிடம் இருந்து வசூலித்த 2 கோடியே 30 லட்சம் ரூபாய் பணத்திற்கான காசோலையை சி.பி.ஐ. கைப்பற்றியது.

குஜராத் மாநிலத்தில் நடைபெற்ற நீட் தேர்வு மோசடியில் ஜெய் ஜல்ராம் பள்ளியின் உரிமையாளர் தீக்சித் பாட்டிலை 3 நாட்களுக்கு முன்பு சி.பி.ஐ. கைது செய்தது. மோசடியில் ஏற்கனவே 5 பேர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், சம்பந்தப்பட்ட பள்ளி உரிமையாளரிடம் நடத்திய விசாரணையில் நீட் தேர்வில் மாணவர்களுக்கு உதவ 10 லட்சம் ரூபாய் வரை பணம் பெற்றிருப்பது தெரியவந்துள்ளது. நீட் தேர்வில் தெரியாத கேள்விகளுக்கு மாணவர்கள் விடை அளிக்க வேண்டாம் என்றும் அதனை தேர்வு முடிந்த பிறகு தாங்களே நிரப்பி கொள்வதாகவும் மாணவர்களிடம் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

தேர்வு தொடங்கியுடன் கேள்வித்தாள்களை தனியார் பயிற்சி மையங்களுக்கு அனுப்பி அவர்கள் மூலம் விடைகளை பெற்று தேர்வுக்கு பிறகு இந்த விடைத் தாள்களில் நிரப்புவது என்பது இவருடைய திட்டமாக இருந்துள்ளது.

இதற்காக 30 மாணவர்களிடம் 5 முதல் 10 லட்சம் ரூபாய் வரை பணம் பெற்றிருப்பதும் விசாரணையில் அம்பலமாகி உள்ளது. அதனடிப்படையில் சிபிஐ மற்றும் காவல்துறையினர் நடத்திய சோதனையில் 2.3 கோடி ரூபாய்க்கான காசோலையை கைப்பற்றியுள்ளனர்.

ஏற்கனவே பல புகார்களில் சிக்கி உள்ள இந்தப் பள்ளியை தேசிய தேர்வு மையம் ஏன் தேர்ந்தெடுத்தது என்ற கேள்வியும் தற்போது எழுந்துள்ளது.

## தமிழகத்திற்கு

# மழைக்கான மஞ்சள் எச்சரிக்கை!

புதுடெல்லி, ஜூலை 6-

தமிழகத்திற்கு மழைக்கான மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, தமிழகத்தில் இன்றும், நாளையும் தரைக் காற்றுடன் மழை பெய்ய வாய்ப்புள்ளது என இந்திய ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதிகபட்சமாக 40 கி.மீ. வேகத் தரைக்காற்றுடன் மழை பெய்ய வாய்ப்புள்ளதால் மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் அருணாச்சல பிரதேசம், அசாம், மேகாலயா மாநிலங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. உத்தரப்பிரதேசம், இமாச்சலபிரதேசம், சிக்கிம், பீகார் மாநிலங்களில் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

